# முகவரி அறியா
# முகவரி ஒன்றிற்காய்....

- கவிதைத் தொகுப்பு -



- விசுவமடு கரீஸ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Donat - 1188



# முகவரி அறியா முகவரி ஒன்றிற்காய்....

06071

- கவிதைத் தொகுப்பு -

விசுவமடு கரீஸ்

மத்திய நூலகம்
மத்திய சன சமூக நிலையம்
விசுவமடு.

வெளியீடு :
செல்லமுத்து வெளியீட்டகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூற் பெயர் | : | முகவரி அறியா முகவரி ஒன்றிறகாய் |
| நூலின் வகை | : | கவிதை |
| ஆசிரியர் சொ.பெயர் | : | கந்தசாமி அரிகரன் |
| ஆசிரியரின் புனைபெயர் | : | விசுவமடு கரீஸ் |
| தொடர்பு முகவரி | : | 264, புன்னைநீராவி<br>விசுவமடு.<br>முகநூல் : mullaikkannan<br>தொலைபேசி: 0777574503 |
| முதற் பதிப்பு | : | யூன் 2015 |
| பதிப்புரிமை | : | ஆசிரியர்க்கே |
| பதிப்பகம் | : | ஸ்ரீ கரீஸ் பிறிண்ட், விசுவமடு. |
| அச்சுப்பதிப்பு | : | சாயி பிறிண்டேர்ஸ்<br>கே.கே.எஸ் வீதி, கோண்டாவில். |
| வெளியீடு | : | செல்லமுத்து வெளியீட்டகம் |
| விலை | : | 150/- |
| ISBN | : | 978-955-42300-0-2 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியோடு போராடத்துடிக்கும் இவன் புலமை...



சுயநலத்திற்காய் வாழ்வோர் பலர் இருக்க பொது நலத்துக்காய் வாழும் இவர் போன்றோர் இளைஞராய் கவிஞராய் இருப்பதால் நமக்குப் பெருமை. இலக்கிய பங்காற்றவேண்டும் என்பதற்காக எழுதிய வரிகள் அல்ல இவை. கிறங்கிப்போனதும், உறங்கிப்போனதும், உறைந்து போனதுமாய் புகழும் , தான் வாழும் சமூகத்திற்காய் இரங்கி, இறங்கி இவர் எழுதிய வரிகளே இவை

இவை என்ன கவிதையா? படிமங்கள் எங்கே? கவித்துவம் எங்கே? என்றெல்லாம் வழமைபோல் கேள்வி கேட்பதற்காகவே வாழாமல் இந்த வரிகளுக்குள் இருக்கும் வலிகளைக் கவனியுங்கள். அந்த வலி தீர தோள் கொடுங்கள்.

06071

பண்பலைவேந்தன்
T.S முகுந்தன்
தமிழ் FM



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு கடந்தும் இவனுக்காய் தோள்கொடுப்போம்...



நாடுகடந்தும் இந்த முகவரி அறியா முகவரி ஒன்றிற்காய் கவி வெளியீட்டுக்கு ஆதரவு வழங்க முடிகின்றது எனும் போது நமது தொலைக்காட்சி குழுமம் பெரு மகிழ் வடைகின்றது. சாதிக்கத் துடிக்கும் ஒரு மனிதனுக்கு உரிய நேரத்தில் தோள் கொடுப்பதன் மூலம் அவன் வெற்றிப் படிகளை சென்றடைகின்றான்.

கரீஸின் கவிதைகள் அதிகமாக ஏதோ ஒரு வகையில் அவலம் நிறைந்த தாக உள்ளது. இவ்வரிகள் யாவும் நிஜங்களுக்கு உயிரோட்டம் கொடுத்ததாக அமைகின்றது. இவர் தொடர்ந்தும் தனது பயனத்தைத் தொடர மின்னல் தொலைக்காட்சியூடாக வாழ்த்துகின்றோம்.

**மின்னல் தொலைக்காட்சி**
**இயக்குனர்**
**(கனேடிய தமிழ்)**
**செ.செல்வரூபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழமையுடன்



தமிழ் இலக்கிய வரலாற்றின் முன்னோடியான கவிதை அன்றிலிருந்து இன்று வரை தனக்கென ஒரு தனி இடத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

06071

இக்கவிதைப் பயணத்தில் தனித்தமிழ் காலம் முதல் இன்று வரை பல சிதைவுகளும், செருகல்களும் இருந்தாலும் வடிவங்களை மாற்றிக் கொண்டாலும் அதன் தனித்துவம் நிலைக்கத்தான் செய்கிறது.

மத்திய நூலகம்
மத்திய சனசமூக நிலையம்
விசுவமடு

எழுத்தாக்கத் துறையில் சாதிக்கத் துடிக்கும் ஒரு மனம் முதலில் தெரிந்தெடுப்பது இக்கவிதைகளையே. அதன்பால் விசுவமடு கரீஸ் தனது இலக்கியப் பயணத்தில் பல சவால்களையும் தாண்டி 'முகவரி அறியா முகவரி ஒன்றிற்காய்' எனும் கவிதை மூலம் தடம் பற்றி வடம் பிடிக்கிறார்.

வயது வேறுபாடின்றி இழகிய மனதுடன் இலாவகமாகப் பழகும் உள்ளம் கொண்டவரது கற்பனா சக்தி, கலை உணர்வு தளைத்தோங்கி ஆழ வேர் விட்டு அகலக் கிளை பரப்பி விசாலமான விருட்சமாக வளர்ந்து எல்லோர் மனதிலும் நின்று நிலைக்கவேண்டுமென அன்போடு வாழ்த்துகிறேன்.

அன்பகலா பிரியங்களுடன்

**வே. முல்லைத்தீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



வன்முறை அற்ற சமூகத்திற்காய்
சமர்ப்பிக்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

## உங்களுக்காய் சில வரிகள்...

வாழ்க்கை எனும் சக்கரத்தில் தோல்விகளும் இழப்புக்களும் மனித மனங்களைச் சிதறடிப்பதுண்டு. அதில் சிக்குண்டு அல்லல்படாதோர் இல்லை என்று சொல்லலாம். வலிகளால், தோல்விகளால் வருகின்ற கண்ணீரை நிறுத்தி அவ் வலிகளை வார்த்தைகளாக்கினேன். இவ்வரிகள் மூலம் மன அமைதியையும், ஆத்மீகத்தையும் அடைந்தேன். பலவிதமான உள்ளக பிரச்சினைகளையும் கஷ்டங்களையும் மன அழுத்தங்களையும் தாண்டி எழுதிக் கொண்டிருக்கிறேன்.

அடக்கு முறையும், அதிகாரமும் ஒரு மனிதனை எந்த நிலைக்குத் தள்ளிவிடும் என்பதனை அனுபவ ரீதியாக உணர்ந்தவன் நான். என்னுடைய வாழ்க்கைப் பயணத்தில் சந்திக்கின்ற பல மனிதர்கள் தமது வாழ்வில் ஏதோ ஒன்றை இழந்தவர்களாக இருந்தார்கள். அவர்களின் இழப்புகள் என்னுள் பல கேள்விகளை உருவாக்கியது. அவர்களின் ஏக்கங்களும் தவிப்புகளும் நியாயமானதாக இருந்தது.

சமூகம் எனும் ஆதிக்கத்துக்குள் நாம் போகின்றபோது பெண்கள் இன்றும் அதிகமாக குடும்ப வாழ்வில் அடக்கப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது. பெண்களின் ஆசைகள், எதிர்பார்ப்புக்கள் நிராகரிக்கப்படுவதனைக் காணமுடிந்தது.

இவ்வாறு தமது ஆசைகளையும் விருப்பங்களையும் தொலைத்துவிட்டு ஜடமாக வாழ்க்கையை ஓட்டிச் செல்கின்ற பல பெண்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய கடமை சமூகப் பொறுப்புள்ளவர்கட்கு உண்டு என்பதை உணர்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர் வீட்டில் கிடைக்காததை புகுந்த வீட்டில் கணவன் மூலம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் வாழ்கின்ற பல பெண்களின் ஆசைகள் கனவுகளாகவே தொலைந்து போகின்றது.

என்னுடைய இந்த தொகுப்பு அதிகமாக பெண்களின் வாழ்வியலில் காதலால், அறியாமையால், உருவாகிய பின்னடைவைத் தந்துள்ளது. இவை சமூகத்திற்கு நல்ல படிப்பினைகளைத் தரும் என்று எண்ணுகின்றேன். இக்கவிகள் யாவும் தமிழ் பண்பலையில் முகுந்தன் தொகுத்தளிக்கும் பொக்கிசம் நிகழ்ச்சியில் தவழ்ந்தவையே.

அறியாமை என்கின்ற மாயையால் அவதிப்படுகின்ற சகோதரிகட்கு நல்ல பாதையைக் காட்டும் என்ற நம்பிக்கையில் இந்தத் தொகுப்பைத் தந்துள்ளேன்.

"முகவரி அறியா முகவரி ஒன்றிற்காய்" எனும் எனது கவி வெளியீட்டில் பங்கு கொண்டு சிறப்பித்த அன்பான இதயங்கள் அனைவருக்கும் என் பிரியமான நன்றிகள்!

பிரியமுடன்
**விசுவமடு கரீஸ்**
பிரியமுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழின் உள்ளே...


நிஜங்களைத் தேடும் நிழல்கள்

பெற்றவர் கண்ணீர்

கடந்து போகும் வருடம்

வாழ்க்கை

தானம்

எச்சங்கள்

படிப்பினை

மீட்டப்படாத வீணை

தவிப்பு

கனவு

ஏழ்மை

கால் தடங்கள்

அர்த்தமில்லா காதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலி

விவாகரத்தும் மறுமணமும்

ஏமாற்றம்

கோபம்

தாய் வீடு

சொந்தமாகாத சொந்தம்

தோழியின் நாட்குறிப்பிலிருந்து....

சிநேகிதிக்கு சில வரிகள்

உணர்வுகள்


பிரிவின் வலி

பெண்மையின் புன்னகை

எங்கே போகிறோம்... கலாசாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜங்களைத் தேடும் நிழல்கள்



கால் நடையாய் பயணித்த மனிதகுலம்
காலங்கள் மாறிப்போனதால்
களைப்பின்றி பறந்தும் கூடப் போகின்றான்....
இது விஞ்ஞானம் தந்த சுகமான வாழ்வு....

மரம் வளர்ந்து
கனியுடன் நிழலும் கூடத் தந்தது
வான் பொழிந்த கண்ணீரால்...
விஞ்ஞானம் வளர்ந்தது.
விசித்திரங்கள் விதையானது
ஆசான்களின் அர்ப்பணிப்பால்....

ஈரிரண்டு வயது முதல்
எண்ணிரண்டு வயது வரை
நம்மோடு பயணித்த தெய்வங்கள்
ஆசான்களே....

தன் வகுப்பு பிள்ளைகள் எல்லாம்
தன் பிள்ளைகள் என்று மார்தட்டும்
நல் ஆசான்கள் போல் யார் இருப்பார்
இவ் உலகில்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவோடு அன்பூட்டி தீவினை யகற்றி
நல்வழி காட்டும் ஆசான்களே
காலம் மாறும் கல்வியின் வடிவங்கள் கூட மாறும்.
முகங்கள் மாறிப்போகும் - ஆனால்
உங்கள் பணி மாறுமா?

நம் பாதம்பட்ட பள்ளியறைகள்
நம் வாழ்வில் மாறிப்போகும்.

உங்கள் நிழலோடு நிஜங்கள் தொடும்
பள்ளியறைகள் மாறுமா உங்கள் வாழ்வில்....

பல மணிநேர பயணம் முடித்தும்
உடல்கள் சோர்ந்தாலும்
உள்ளம் சோர்வின்றி
புன்னகை தரும் ஆசான்களே....
நம் வாழ்வின் தெய்வங்கள் நீங்களே...

முகவரி அறியா புதுமுகம் என்றாலும்
ஆபத்தில் கைகொடுக்கும் உத்தமர்களே....
வாழ்த்துகிறேன்....
இடிபோல சோதனைகள் நீங்கள் கண்டாலும்
தலைநிமிர்ந்து தொடரும்உங்கள் பணி கண்டு
மெய் சிலிர்க்கும் என் உள்ளம்
தலை சாய்த்து வாழ்த்துகிறேன் உங்கள் பணி தொடர....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றவர் கண்ணீர்



காலம் எனும் நதியினிலே
கடந்து போகும் ஓடம் நான்.
கண்ணீர் எனும் துளியினிலே
நனைந்து போகும் சேலை நான்....

நேற்றின்று நாளை எல்லாம்
வெறுமனே கடந்திடுமா? - இல்லை
விடை இல்லா விடுகதைபோல்
நம் வாழ்வு நடந்திடுமா?

தேனான என் திருமண வாழ்வு
தெய்வம் தந்த ஐந்து பொக்கிசங்கள் மலர
கொடிய நோயொன்றால் என்னவள்
அவனடி சேர்ந்தாள்....

கல்லாய்ப்போன இதயத்தோடு
காலங்கள் ஓடி மறைய....
பட்டப்படிப்பும் முடித்து
அவரவர் கைப்பிடித்து வைத்தேன்
இதென் கடமை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புது வாழ்வு கிடைத்திட
நான் இங்கு தனித்திட
வயோதிபர் இல்லமொன்று
அணைத்தது எனை....
கூட்டம் விட்டுப் பிரிந்து வந்து
கூண்டில் அடைபட்ட குயில்போல்

இங்கே கூட்டம்...
நள்ளிரவு தாண்டியும் பிள்ளைகளோடு
பேசிடும் பெற்றவர்கள்
கண் விழித்துப் பார்த்தால்
கலைந்திடும் கனவுகள்....

பந்தங்கள் விட்டுப்போக
பாசத்திற்காய் காத்திருக்கும்...
பெற்றவர் கண்ணீரை யாரறிவார்....
பசிதீர்க்க உணவும்
படுக்கப் பாயும் போதுமென்றால்
மானிடப் பிறப்பெதற்கு....?

பெற்றவர் இங்கு தவிக்க.....
பிள்ளைகளின் கொண்டாட்டம்
நிலைத்திடுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்து போகும் வருடம்

கடந்திடும் இவ்வருடம் நடந்து போன
சுமைகளோடு கடந்திட
பிறந்திடும் புதுவருடம்
புதிதாய் ஒளி தருமா?

படுக்க பாயுமின்றி கடிக்கும் நுளம்போடு
பிறந்தது கடந்திடும் இவ்வருடம்...
விதி தந்த விளையாட்டில் என்தந்தை
விட்டுப் போன சுமைகள் எல்லாம்
பிறந்திடும் புது வருடம்
கடந்து போகுமா - இல்லை
மலர்ந்திடும் வருடம் தொடர்ந்திடுமா?

விடிகின்ற பொழுதுகள் எல்லாம்
வீட்டுப் படலையில் அடிக்கடி மணிச்சத்தம்
பழகிப்போன கடன்கார முகங்களின்
கல்லான வார்த்தைகள்....

அவை தொடர
பாரிச வாதத்தால் என்தாய் படுக்கையில்
பத்து வயசில்லா தங்கை இரண்டும்
பால்குடி மறவா தம்பி ஒன்றும்
பத்தாம் வகுப்பு நான் படிச்ச
கடைசிப் புத்தகம்

இப்போ என்னிடம்
சுமை தாங்கும் வாழ்க்கைப் புத்தகம்....
வெள்ளைச் சீருடையில் பள்ளிசென்ற சிட்டு நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ வேலைக்காய் வீடு தேடும்
பாவியாய்...

இவை யாவும் என் குடிகார தந்தை
விட்டுப் போன சுமைகள்....
கன்னிப் பெண் என் கண்ணீர்க்கதைகளை
கவியாக்க முடியா

முன் தந்த வரிகள் நிலவில் நடந்தவை
சொல்லா வரிகள் இருட்டில் நடப்பவை
சொல்ல முடியா தவிப்புகள் எத்தனை
சொல்லத் தவிக்கும் ஏக்கங்கள் எத்தனை?


விதி தந்த விளையாட்டில் - நான்
விளையாட்டுப் பொம்மை
நடந்து போன காயங்கள்
கடந்து போகும் வருடத்தில் மறைந்து போக
பிறந்திடும் வருடம் புதிதாய் ஒளிதருமா?

இல்லை கல்லான கற்பக்கிரகங்கள் எல்லாம்
எனக்காய் கண்ணீர் விடுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை



இரைதேடிப்போன பறவைகள்
திசைமாறிப் போயினவே - இது
இயற்கையின் விளையாட்டா? அல்ல
இறக்கையின் விளையாட்டா?...

ஆழம் கொண்ட அன்பு
தடுமாறிப் போனது - இது
விதியின் விளையாட்டா? இல்லை
வினையின் விளையாட்டா?....

தோல்விகள் மட்டும் வாழ்க்கை இல்லை.
அங்கே சின்னச் சின்ன வெற்றிகளும் உண்டு.
சோகம் மட்டும் தொடர்வன அல்ல - அங்கே
சொட்டு சொட்டு சுகங்களும் கலந்திருக்கும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் மட்டும் நிரந்தரமல்ல - அங்கே
கண்கள் அறியா புன்னகை தவழுவதுண்டு....
வறுமையும் நிரந்தரமல்ல
செல்வங்கள் வந்து போகும்....

வருடங்கள் நிரந்தரமல்ல - அது
கழிந்து போகும்.
வாலிபமும் நிரந்தரமல்ல - அது
மாறிப்போகும்....

உறவுகள் நிரந்தரமல்ல
பிரிவுகள் வந்துவிடும்....

வாழ்க்கை எனும் பந்தயத்தில்
வந்து போகும் இவை எல்லாம்
கண்டு தான் வாழவேண்டும்
புரிந்து கொள் நண்பனே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானம்

அமைதியான அதிகாலை நேரம்
தென்றல் காற்று தழுவ துன்பங்கள் விலகி
என்னையே மறந்து உறங்கிக் கொண்டிருந்தேன்...

போட்டி போடும் இவ் உலகு போல்
தம்மில் யார் வீரர் என்று காட்டிடும்
சேவல்களின் கம்பீரமான கூவல் ஒலிகள் - என்
தூக்கத்தைக் கலைத்தது....

இரை தேடிய காலம் போய்
ஒரு சொட்டு நீர் கூட கிடைக்காதா என்று
சிறகடித்துக் கொண்டிருக்கும்
பறவைகளின் பயணம் தொடங்கிக் கொண்டிருந்தது....

என் ரசனையைக்கலைத்த அந்த ஓசை
அத்திசை பார்த்து தம்
வேகத்தை அதிகரிக்கும் மக்கள் கூட்டம்....
என் காதுகளைக் கிழித்து
அபாய ஒலியுடன் எனைக் கடந்து செல்லும்
அவசர சிகிச்சை வாகனம்.....

வீதி எங்கும் விசிறிக் கிடக்கும்
செங்குருதி
நாளுக்கு நாள் விபத்துக்களால்
சிதறுண்டு போன
சிதைந்து போன உடல்கள் கண்டு
கண்ணீர் விடும் மானிட உள்ளங்கள்...

போதும் இறப்புக்கள்....
நண்பா....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் ஒன்றைக் காத்திடும்
உன்னத பணி செய்வோம் புறப்படு....
உன் உடலில் ஓடும் செங்குருதி
ஒரு சொட்டு நீ கொடுத்து
உயிரொன்றைக் காத்திடு.....

உறவுகள் பலரின் கண்ணீரைத் துடைத்திடு....
உன் இறுதி மூச்சிலும் கண்தானம் செய்திடு
நீ மண்ணோடு போனாலும் - ஓர் உயிர்
ஒளி பெற்று வாழும்
உன் உயிர் துடிப்பு நின்றிடும் வேளை
உன் இதயமதைக் கொடுத்திடு - ஓர் ஏழை
உன் தயவால் உயிர் பெற்று வாழ்வான்....

நீ பிறந்திட்ட நன்நாளில் - உன்
கொண்டாட்டம் குறைத்து
ஓர் ஏழையின் வயிராற்றி விடடா... அவ்
ஏழையின் நிம்மதிப் பெருமூச்சால் நீ
பார் போற்ற வாழ்வாய்....

அந்நாளில் ஆடம்பரம் குறைத்து
அன்னையர் இல்லம் போய் வா...
அன்பாய் அவர்களோடு சில நொடிகள்
பேசிவா... அவ்
அன்னையர்கள் மகிழ்வால் - நீ
நூறாண்டு வாழ்வாய்

நண்பனே....
உயிர்காக்கும் உன்னத பணிக்கு
செய்திடடா தானம்...
உன் உறவுகட்கும் சொல்லிடடா இச்செய்தி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சங்கள்



தோற்றுப்போன ஒரு சமூகம்
நோக்கிய என் பயணத்தில்
தோற்றுப்போன ஒரு பெண்ணவளின்
வாழ்க்கைப் பயணத்தின்
எச்சங்கள் இவை....

கன்னிப் பருவமதில்
பள்ளிப்படிப்பு முடியுமுன்
பார்த்துப் பழகிய இதயமொன்றிடம்
என் இதயமதைப் பறிகொடுத்ததால்
பத்து மாதம் சுமந்து பதினெட்டு வரை
பக்குவமாய் வளர்த்த பெற்றவர் முதல்
உற்ற உறவுதனை மறந்து
பறந்து சென்றேன் காளையவனோடு
முகவரி அறியா முகவரி ஒன்றிற்கு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் வாரங்களாகு முன் - என்
வாழ்க்கையில் நடந்து முடிந்தது
திருமண பந்தமெனும்
நாடக அரங்கேற்றம்....

ஆவணி மாத கதிரவன் கண்ணைப் பறிப்பான்
என்றிருந்த நான்
அமைதியான இராத்திரிகள்
அலங்கோலமாகுமென்று நினைக்கவில்லை
பதினெட்டில்....

நிலவைச் சுற்றி மின்மினிகள் போல்
எனைச் சுற்றி வட்டமிட்ட உறவுகள்
அப்போதான் நினைவில் வந்தனர்
இப்போ மழைக்கால நிலவு நான்
கருமுகில் கூட்டம் மறைத்து மறைத்து
நகர்கிறது.....

அத்தனையும் தாண்டி நான் பிரகாசிக்கிறேன்...
ஆனாலும்....
வெறுப்புகளும் எதிர்பார்ப்புகளும் கனவுகளாயின
தனிமைகளும் வெறுமைகளும் சொத்துக்களாயின...
வன் வார்த்தைகள் பழகிப் போயின....
இதுதான் பாவப்பட்ட பெண்ணவளின்
வாழ்க்கை என்று புரிந்து கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிப்பினை



இரைதேடும் பறவைகள்....
நீர் தேடும் விலங்குகள்......
பசுமை தேடும் காதலர்கள்...
தேன் தேடும் தேனீக்கள்....
உறவைத் தேடும் மனிதர்கள்....
பிரிவைத் தேடும் உறவுகள்....

இத்தனையும் தாண்டி
இராத்திரியின் அமைதியைக் குலைத்த
அந்த அழுகுரல்....
காற்றோடு வந்து என் காதுகளில் புகுந்த
அலறல் சத்தம் அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரொன்று பிரிந்து போகவில்லை
குடிகாரக் கணவன் நடாத்தும்
வெறிகொண்ட யுத்தத்தில்
மனைவி எனும் எதிரியின்
அலறல் சத்தமது....

தட்டிக் கேட்டிட உறவென்று யாருமில்லை
தண்டனை கொடுத்திட சட்டத்தில் இங்கு
இடமில்லை....
வீதிக்கு வீதி மதுக்கடைகள்....
அங்கு சினிமா பட காட்சிகளும் கூட...

காதல் தந்த படிப்பினை இது.
ஊர் விட்டு உறவை வெறுத்து

பள்ளிப் பருவமதில்
கைப்பிடித்துக் கொண்டதால்
தனி மரமாய் இடிதாங்கும் பெண்ணவளின்
துயர் துடைப்பது யார்?....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்டப்படாத வீணை

நான் ஓர் மீட்டப்படாத வீணை!
நான் செய்த பாவமல்ல
எனைப் பெற்றவர் தந்த பாவம்
முகமறியா தந்தையின் காமத்திற்கும்
முகவரியறியா தாயின் ஆசைக்கும்
சன்மானமாய் நான் பிறந்தேன்....

நான் தூங்கிய முதல் மடி
குப்பைத் தொட்டி
நான் பார்த்த முதல் முகம்....
நினைவில் இல்லை....
'அம்மா' என்றழைக்க யாருமில்லை....
அன்போடு எனை
அழைக்கத் தந்தையுமில்லை.

சமூகம் எனும் வலையினிலே - நான்
பாவப்பட்டவள்.
சம்பிரதாயம் எனும் சட்டத்தில் நான்
ஒதுக்கப்பட்டவள்.
வாழ்க்கை எனும் சக்கரத்தில் - நான்
வாழத் தகுதியில்லாதவள்.... இது
யாரால்???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிப்பு



பெண் என்றால் பேயும் இரங்குமாம் – நம்
சந்ததிக்கோர் பெண் பிள்ளையும் நானே
என் வீட்டின் தலைப்பிள்ளையும் நானே

வீட்டின் தலைப்பிள்ளை பெண் என்றால்.....
அன்னையின் புன்னகையும்
தந்தையின் சோகமும்
யாருக்கும் புரிவதில்லை.

ஆண் என்றால் தந்தையாய் நின்று
சந்ததியின் கடமைகள் முடித்திடுவான் – இது
தந்தையின் நம்பிக்கை...
பெண் என்றால் செல்வங்கள் பெருகிடும்
சந்ததி தழைத்திடும் – இது
அன்னையின் ஆசைகள்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பெண்ணாய்ப் பிறந்தேன்
செல்வங்கள் பெருகவில்லை.
சந்ததி தழைக்கவில்லை.... ஆனால்
காலனவன் கண் திறந்து என் வீடு வந்ததால்
விபத்தொன்றில் மாயமாகினர்
எனைப் பெற்றவர்கள்....

தந்தையின் நம்பிக்கை உடைத்து
வரையறை எனும் சம்பிரதாயம் கடந்து
வாழ்க்கை எனும் போர்க்களத்தில்
தந்தையாய் நான் குதித்தேன்....

பட்டாம் பூச்சியாய் பள்ளி செல்லும்
கனவுகள் முடித்திட புறப்பட்டேன்...
என் இளமைக்கால கனவுகள் மறந்து
உடன் பிறந்தவர் கடமைகள் முடித்தேன்....

கடமைகள்முடிந்திட
காலமும் கடந்து போக
கல்யாண வயதைத் தாண்டியும்
தனிமரமாய் வாழும் - எம்
போன்றவர் தவிப்பை யார் புரிவார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு

பல இராத்திரி பொழுதுகளில் என் கனவுகளில்
வந்துபோன அதிசய விம்பங்கள்.
என் உணர்வுகளைச் சிதறடித்த அக்காட்சிகள்
இராத்திரியின் அமைதியைக் குலைத்துப் போன
விந்தைமிகு விசித்திரமான சம்பவங்கள்.....

ஈரேழு உலகங்கள் என் கண்முன்னே....
அங்கு மனித வாழ்வைக் கண்டேன்.
ஆறுகள், நதிகள், காடுகள் என
பலதையும் கண்டேன்....
பனிபடர்ந்த ஒரு தேசமும்
ஆடம்பரமில்லா மனித வாழ்வையும் கண்டேன்....

அவர்களோடு சில நொடிகள்
உறவாடியும் வந்தேன்....
தங்க மாளிகைக்குள் வெண்ணிற ஆடைகளில்
உலாவரும் மங்கையர்களைக் கண்டேன்...
ஆடலும் பாடலும் என வஞ்சகமில்லா
அன்பைக் கண்டேன்....

வெறிகொண்ட முகங்களையோ
நவீன ஆயுதங்களையோ நான்
அங்கு எங்கும் காணவில்லை.
அமைதியான வாழ்வு
ஆனந்தமான மனிதர்களோடும்
உண்டு உறவாடி வந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது விநோதமானாலும்
வேடிக்கையானாலும்
விடையில்லா பல வினாக்களுக்கு
விடை தருபவை இவை.

மானிடப் பிறப்பில் ஏழு ஜென்மமென்றால்
ஏழு பிறப்பும் ஏழு உலகிலா?
மூவிரு விமானங்கள் போர்மூடாவில்
மாயமானது உண்மை என்றால்
மாயத்தின் மர்மம் என்ன?

சில பறக்கும் தட்டுக்கள் வானில்
வந்து போவது உண்மை என்றால் என்
சிந்தையைச் சிதறடித்த கனவுகள்
உண்மையானவையா?
இவை எல்லாம் கனவென்றால்
யாழின் மர்மத் தீவிற்கு என்ன பதில்?

யாழில் மறைந்து போன சில
கிராமங்கள் எங்கே....?
விஞ்ஞானம் வளர்ந்தாலும்
விந்தைகள் பல கற்றாலும்
மர்மங்கள் மர்மமாய்
மறைந்து போவதேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழ்மை



கறுப்பு பேனா கையிலெடுத்து
கவி ஒன்று வரைகின்றேன்
வெள்ளைக் காகித மொன்றில்...
எழுத மறுக்கிறது என் பேனா!
துடிக்க மறுக்கிறது என் இதயம்

இரத்தத்தை மையாக்கி தொடர்கிறேன்
விதிதந்த விளையாட்டை
கவியாய்....
உண்ண உணவில்லை....
உடுக்க உடையில்லை.....
படுத்துறங்க பாயுமில்லை....
தெருவோரக் கடை வாயில்கள் - என்
படுக்கையறை....
கறைபடிந்த உடைகள் - என்
மானம் காப்பவை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி செய்த விளையாட்டில் - நான்
ஓர் விளையாட்டுப் பொம்மை...
விலை மாதல்ல நான்.
விலை பேசுகிறது பல கண்கள்.
மிட்டாய் கடை அல்ல என் இதயவறை
வந்தவரெல்லாம் உண்டு போக
என்பதை அறியாமல்

தாயுமில்லை
தந்தையுமில்லை
தத்துப் பிள்ளையாய் நான்பட்ட
வேதனை போதும்.
விதியே வென்றுவிடு
எனை கொன்று விடு
விலை பேசும் கண்கள்
வலை தன்னில் சிக்கு முன்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால் தடங்கள்

மரணித்துப் போன என் உணர்வுகளோடு
மௌனித்துப் போன என் கனவுகளும்
கலைந்து போனது....
விதியை வென்றிட - நான்
பதித்த கால் தடங்கள் எல்லாம் சிறு
வெள்ளமொன்றால் அழிந்து போனது.....

நான் பயணித்த பாதை எங்கும்
கற்களும் முட்களும் - என்
நண்பர்களாயினர்....
விதியை வென்றிட சென்றிட்ட என் பயணம்
இடைவழியில் முடிந்து போனது.

ஏறாத கோவில் படிகள் இல்லை.
வேண்டாத தெய்வங்கள் இல்லை.
ஆனால் விதியை வென்றிட என்னால்
முடியாமல் போனது - நான்
கோழை அல்ல, ஏழை என்பதால்

தொடரும் என் பயணம்
மரணித்துப் போன உணர்வுகட்கு
உயிர் கொடுக்கும் வரை
கலைந்து போன கனவுகள்
நிஜமாகிடும் வரை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தமில்லா காதல்

பகுத்தறியா வயசு
பள்ளி தந்த காதல்
நல்லது கெட்டதை சொல்லிட
அப்போ யாருமில்லை...

கணித வகுப்பைக் கட்டடித்து
என்னவனோடு சுற்றாத வீதிகள் இல்லை...
தீண்டாத நதிகள் இல்லை....
ஆட்களில்லா வீதிகளும்
மர நிழல்களும் - நம் அர்த்தமில்லா
காதல் கதை பற்றிச் சொல்லும்

அது அறியா வயதும்
புரியா உணர்வும் என்பது தெரியா...
பள்ளிக்காதல் படலை வரை - என்
காதில் கேட்ட வார்த்தைகள்....
காதலில் மிதக்கும்
அறியா வயசில் - அதன்
அர்த்தம் புரியா....

காதல் வேணாம் எனும்
பெற்றவர் வார்த்தை கசந்திட - அறியா
வயசுக்காதலன் வார்த்தைகள் இனித்திடும்
பள்ளிப் படிப்பு முடிந்திட
அக்காதலும் முறிந்திட
கனத்த இதயத்தோடு நகரும் நாட்கள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலின் வலி மறக்க
மீண்டுமோர் இதமான காதல் பயணம்....
பழையவை புதிதாய் தொடர
அதுவும் ஓர் அர்த்தமில்லா காதல் என்று
இப்போ புரிகிறது.....

பகுத்தறியா வயசின்
பள்ளிக்காதல்
அர்த்தமில்லா காதல் என்று
பெற்றவர் சொல்லவில்லை அன்று - என்
தந்தை இட்ட தழும்புகள்
இப்போதான் வலிக்கிறது - அது
அர்த்தமில்லா காதல் என்று சொல்கிறது.

தண்டித்த தந்தை அன்று
அர்த்தமில்லா காதல் என்று
அன்பாய்
ஓர் வார்த்தை சொல்லவில்லையே!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி

பத்து மாசம் சுமந்து
பட்ட பாடும் மறந்து
பாலர் வகுப்பு முதல்
பள்ளிக் காலம் முடியும் வரை
ஏங்கிய விழிகளுடன்
கரைசேரா கற்பனைகள் பலவும்
முட்டி மோதிட
தவிக்கும் பெற்றவர் பாசம்.....

விதியின் விளையாட்டால்
பள்ளி செல்லும் சிட்டொன்று
மதங்கொண்ட யானை ஒன்றால்
சிதைந்து போனது....

பெற்றவர் கனவுகள் கலைந்து போக
உற்றவர் உறவுகள் வாடிப்போக
பள்ளிச் சிட்டொன்று
மடிந்து போன துயர் கேட்டு
வாடிப் போனது கல்விச் சமூகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாகரத்தும் மறுமணமும்



அழகு பார்த்து
அந்தஸ்தும் பார்த்து
படிப்பு பார்த்து
பட்டமும் பார்த்து

அரசாங்க வேலையும்
ஜாதகமும் பார்த்து
மாப்பிள்ளை பிடித்துப் போக
இலட்சக் கணக்கில் ரொக்கமும் கொடுத்து...
தங்க நகையோடு
அழகான வீடும் சீதனம் என
பேசி முடித்திட

ஊரழைத்து உறவழைத்து
சடங்குகள் சம்பிரதாயமாய் முடித்து
கைப்பிடித்து பெற்றவர்
பிள்ளையைக் கொடுத்திட....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசிக்காசில் ஆடம்பர வாழ்வும் வாழ்ந்து
இரண்டு பிள்ளைகள் பெற்று
காலம் கடந்து போக - ஊர்
சந்தியில் குந்தி இருந்து
குடித்து கும்மாளமிட்டு
சீதன காசும் ஒழிந்து போக
கஸ்டம் கைவருட....
சின்னச் சின்ன சண்டைகளாகி - முடிவு
விவாகரத்து மேடையில்....

நிஜமில்லா காரணங்கள் நிஜமாகி
குருவிக் கூண்டைக் கலைத்திட
சட்டத்தில் இடமுண்டு.
மீண்டு மோர் கல்யாணம்
அதற்கும் அங்கு இடமுண்டு.

இதுதான் தமிழர் நம் கலாசாரமா?
விவாகாரத்து மில்லை
மறுமணமும் இல்லை என்றால்
உண்மைகள் பொய்யாகா!
பொய்கள் உண்மையாகா!
கண்ணீர் விடும் பெண்களும்
அன்பைத் தேடும் குழந்தைகளும்
நம் மண்ணில்
குறைந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றம்

அழகான கன்னியவளின்
அலைமோதும் சிரிப்பொலிகள்
வாலிப வயசின் ஆயிரம் ஏக்கங்கள்
ஆயிரமாயிரம் கனவுகள்....

பெற்றவர் மடியில் கிடைத்திடா பாசம் தனை....
வாழ்வில் துணையாய் வருபவர் மடியில்
பெற்றிட ஆசைகள்....

வாழ்வில் சின்ன சின்னதாய் சேர்த்திட்ட
மங்கையவள் ஆசைகள் எல்லாம்
பெற்றவர் மடியில் கனவாய் கலைந்திட
காதல் கொண்ட என்னவன்
தந்திடுவான் என்றெண்ணி
ஊர்க்கரை கோவில் ஒன்றில்
மஞ்சள் கயிறெடுத்து
மங்கள ஓசையின்றி
தாலி தந்தான் என்னவன்...

மங்கள வாத்தியங்கள் முழங்க
ஊர் கூடி வாழ்த்துக்கள் கூற
என்மகள் வலம் வருவாள் – என்ற
பெற்றவர் கனவுகள் கலைத்து
தொடர்ந்தது என் புது வாழ்வு....

நாட்கள் சில நகரவில்லை
காதல் எனும் புனிதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமம் எனும் சிறைக்குள் நான்
வந்ததாய் உணர்ந்தேன்....

விழி திறந்து அழமுடியா
சோதனைகள்
அவன் தந்தான்....
விழி மூடி தூங்கமுடியா
விபத்துக்கள் நான் கண்டேன்....

சின்னதாய் ஓர் வலி எனைச் சீண்டு முன்பே
தன் மடி சாய்த்து தூக்கம் தந்த தாயும்
சோறூட்டி விட்ட அண்ணனும்...
தோள் மீது சுமந்த தந்தையும்
இப்போதான் நினைவில் வந்தனர்....

எதிர்பார்ப்பில்லா
பெற்றவர் பாசம் தனை நான் துறந்து
காதல் காமம் எனும் சிறைக்குள்
சிக்குண்ட போது தான் - வாழ்வின்
அர்த்தம் புரிந்தேன்....

சின்னதாய் வலி தாங்கமுடியாத
என் செம்மேனி - இப்போ
சூடு காண்பதேன்?
சுருண்டு போவதேன்.....?

காதல் செய்யும் வாலிபரே - உமை
நம்பி வரும் பெண்மைக்கு
சோதனைகள் ஏன் தாறீர்?
சொர்க்கத்தைத் தந்திடும் நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனைகள் தந்திடும்
காரணம் தான் ஏது?

பெண்மைக்கு
விலை பேசும் நீ - நாளை
உன் பெண்ணிற்கும்
விலை பேசுவாயா?
மௌனங்கள் கலைத்து
வாய் திறந்து பேசிடு
நான் மௌனித்தும் போகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபம்

வாழ்க்கை எனும் சக்கரத்தில்
வந்து போகும் இன்பங்கள் துன்பங்கள்...
இப்பிரபஞ்சம் தனில் வந்து போகும்
இருளும் ஒளியும்....

நிலையில்லா மனித வாழ்வும் - அதில்
வந்து போகும் ஏழ்மையும் செழிப்பும்
மின்மினி பூச்சிகளின் கண்சிமிட்டலுடன்
நிலவைப் பார்த்து நான் சோறுண்டது ஒரு காலம்....

நிலவைக் காட்டி சோறூட்ட யாருமில்லா
குழந்தைகள் பல...
நிலவொளியில் இளைப்பாற முடியா
பெற்றவர் பலர்...

நிலவே உன்னில் மட்டும்
அளவிலா கோபம்
நிலவைப் போல் என்னவள் மனம் இருந்ததால்
உனை நான் நேசித்தேன்...
என்னவள் உனைப்போல் ஆனதால்
நான் உனை வெறுக்கிறேன்....

தொட்டிட முடியா தொலைவில்
நிலவே நீ.... நான்
பார்த்திட முடியா நிலையில்
என்னவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் வீடு

வாலிப வயசில் காதல் தந்த சுகத்தால்
தாய் வீட்டை ஒரு கணம் மறந்து
கைப்பிடித்துச் சென்றேன் நான்....

புதிதாய் உறவுகள்
புதியதோர் உலகம்....
புதிது புதிதாய் பயணங்கள்....
புதிதாய் பூத்த உறவுகளின்
புன்னகை சிந்தும் வரவேற்பும்
பூத்துக் குலுங்கும் சிரிப்பொலிகளாலும்
எனையே நான் மறந்து போனேன்

என் காதல் நாயகன் வாழ்வின் நாயகனாய்
மணித்துளி கூட விலகாமல் என்னருகில்...
புதிய புதிய முகங்கள்
புதிது புதிதாய் அனுபவங்கள்....

நிஜமான இந் நிஜங்கள்
நியமின்றிப் போகு மென்று
நினைத்ததில்லை நான் ஒதுபோதும்.
நள்ளிரவு தாண்டியும்
என்னடி வந்து சேரா என் நாயகன்.
வீதியோரம் கண் எறிந்து காத்திருந்தேன்
சற்றுக் கண் அயர்ந்தேன்.

தத்தித்தழுவிச் செல்ல மொழி பேசி
தவழ்ந்த காலங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் மடி விலகி தந்தை தோள் சாய்ந்த
கணப்பொழுதுகள்

வெள்ளைச் சீருடையில் பள்ளி சென்ற நாட்கள்
தோழிகள் கூட்டமாய் சிரித்துப் பேசிய
சிங்காரப் பொழுதுகள்...
வண்ண வண்ண பட்டுச் சேலை கட்டி - ஆலய
வீதி எங்கும் துள்ளித் திரிந்த இன்பமான
பொழுதுகள்....


திருவிழா காலமதில் என்வீடு வந்து சேரும்
உறவுகளின் கூட்டமும்
இரவின் அமைதியைக் கலைத்திடும்
கூத்தும் கும்மாளமும்
வந்து போயின என் நினைவுகளில்

அன்பாய் எனை யாரோ வருட
கண் விழித்தேன் என் நாயகன்...
புதிதாய் பந்தங்கள் வந்தாலும்
புதிது புதிதாய் பாதைகள் முளைத்தாலும்
தாய் வீட்டின் சொர்க்கம் கிடைக்குமா
எங்கும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தமாகாத சொந்தம்



நான் கடந்து வந்த பாதையை
சற்று மீட்டிப் பார்த்தபோது
கண்களில் முட்டிய கண்ணீரைத் துடைத்துவிட்டு
மௌனமாகிப் போனேன்....

பள்ளிக்காலமதில் கிடைத்த
பாசமான நட்பொன்று.
படலைத் தாண்டியும் வீடுவரை தொடர்ந்த
உன்னத உறவது.....

இன்ப துன்பம் நல்லது தீயது முற்றிலும்
பகுத்தறியா இளமைக்காலமதில்
அவ் உறவால்....
புதிதாய் கிடைத்த
சொந்தமாகாத சொந்த உறவுகள் பல.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளமில்லா பேச்சுக்களாலும்
வஞ்சமில்லா வார்த்தைகளாலும்
எனை பாசப்பிணைப்பில்
கட்டிப்போட்ட காலமது...

இன்பங்கள் மட்டும் தேடும்
இளமைக்காலமதில்
இனிமையான வார்த்தைகளால்
உள் உணர்வுகளை
கண்டிக் கொண்ட பந்தமது.....

பள்ளி வகுப்பில் தொடர்ந்த
பாசமான உறவின் பிறந்த நாளதில்
என் உணர்வு சொன்னதை
செயலில் செய்த நேரமது.....

உன் பிறந்த நாளில் மெழுகு கொண்டு
உன் வயது குறித்து ஏற்றுகின்ற ஒளியதை
உன் மூச்சால் அணைத்துவிட்டு
ஏனிந்த கொண்டாட்டம்....
கடந்து வந்த பாதையை
இருளில் புதைத்துவிட்டு
இருளில் தொடங்கும் புது வாழ்வு
வேண்டாம்.....

ஏற்றிய தீபமதை அணைப்பதை
நிறுத்திவிட்டு - அவ் ஒளியில்
தொடர்ந்தது கொண்டாட்டம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன சண்டைகள் போட்டு
செல்ல கோபம் கொண்டு
சிரித்து பேசிய நம் உறவுதனை
எட்டி நின்று கல் எறிந்து
வேடிக்கை பார்த்த உயரிய உள்ளமொன்றால்
கலைந்து போனது
பாசக் கூட்டம்.....

கனவில் கூட நினைத்திடா
கண்ணிமைக்கும் பொழுதுகளில்
வெவ்வேறு திசை நோக்கி
காலமும் எமைக் கலைத்துவிட
சிதறுண்ட நம் பந்தம்.....

அன்று கல் எறிந்த உயரிய அவ் உள்ளம்
கண்ணீரோடு இன்று
தவிக்கிறது....
இது விதியா......?

காலங்கள் பல கடந்து போயும்
காரணமின்றி கலைந்து போன - நம்
கூண்டின் தடங்கள் தேடி - உன்
ஒவ்வொரு பிறந்த நாளன்றும்
ஒளி ஏற்றி பயணிக்கிறேன்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழியின் நாட்குறிப்பிலிருந்து....

கதிரவன் மெல்ல மெல்ல உறக்கத்திற்கு
சென்று கொண்டிருந்த வேளை
சஞ்சலத்தில் என் மனசு....

தோழனின் அழைப்பிற்காய் காத்திருந்து
பொறுமையும் எனைவிட்டு
கதிரவன் போல்
மெல்ல மெல்ல சென்று கொண்டிருந்தது....

குறுகிய நாட்களில் - எனக்கு
கிடைத்த தோழமை அது.
காரணம் புரியவில்லை.....
சுமையே வாழ்வாகிப்போன என்வாழ்வில்
தாயாய், தந்தையாய்
தோழனாய், தோழியாய்
கிடைத்த அந்த தோழமை....

பிடிப்பற்றுப் போன என் வாழ்வில்
வாழ்வின் அர்த்தத்தைப்
புரிய வைத்த தோழமை....
சாவின் வழி நோக்கிப் பயணித்த என் வாழ்வில்
உயிரின் உன்னதத்தைப் புரியவைத்த
தோழமை....

வாழ்வில்
தடம் மாறி பயணித்தவேளை
போகும் வழி சரியாய் காட்டிவிட்ட தோழமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வியால்
கண்ணீர் விட்டு கதறிய வேளை
என் கண்ணீர் துடைத்து - கை
கொடுத்த தோழமை....

தன் வலி மறந்து என் வலி தீர்த்த
தோழமை....
பட்டினியால் வாடியவேளை
தன் கையால் ஊட்டிவிட்ட தோழமை...
அறிவுரைகள் பல சொல்லிடும்
அன்பான தோழமை....

சின்னச் சின்ன சண்டைகள் போட்டு
செல்ல மொழி பேசிடும் என் தோழமை.....
இன்று எனை
நினைக்க மறப்பதேன்?
மறக்க நினைப்பதேன்?

காரணம் புரியவில்லை!
தவிக்கிறேன் - நான்
உண்மை நட்பின்
உன்னதத்தை இழந்து.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிநேகிதிக்கு சில வரிகள்



தோழியே! உன் உன்னத நட்பு
எனைவிட்டுப் போகவில்லை - அது
உள்ளத்தில் உயிரோடு வாழ்கிறது
உன் கேள்விகளுக்கெல்லாம் மௌனம்
கொள்ள முடியாது என்னாலே

வாழ்க்கை எனும் கூண்டில் வாழ
நிர்ப்பந்திக்கப்பட்டவன் நான்....
விரும்பிய வாழ்வை வாழமுடியாத கோழை நான்.
விரும்பாத வாழ்வை வாழவேண்டிய ஏழை நான்.
என்ன செய்வேன்? என்
வாழ்க்கைப் பயணம் பற்றி நீ அறிய வாய்ப்பில்லை.
அதனால் சொல்கிறேன் கேள்!....

கள்ளம் கபடமில்லா பிஞ்சு வயதில்
தோழர்கள் தோழிகள் கூட்டமோ
எனக்கில்லை....
மண் வீடு கட்டி விளையாடியதும்
பட்டாம் பூச்சிக்காய் அலைந்ததும்
தனியே தான்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கலன்று புதுச்சட்டை போட்டதோ
பட்டாசு கொழுத்தியதாயும் நினைவில் இல்லை.
மறக்கவில்லை....
நிஜத்தில் இல்லை அதுதான்!

சொந்தமென்றோ
நட்பென்றோ...
வாசல் படிகள் எனக்கில்லை....
பந்தமென்று உறவாட யாருமிங்கு வரவில்லை....
இல்லையென்றல்ல
எனக்கெட்டவில்லை....

கொண்டாட்டம் என்று கூத்துப்போடவோ
கூடிமகிழவோ விரும்பாமலில்லை.
விரும்பியும் பயனில்லையே....

தனிமைகளை சுகமாக்கினேன்....
இரவுகளை வரமாக்கினேன்... அதில்
உன்னையும் உறவாக்கினேன்....
தோழியாய் உனை பூஜித்து
சுமைகள் மறந்து உறவாடினேன்....
என் நிலை மறந்து
வாழ்வில் நிர்ப்பந்தக் கைதி நான் என்று அறியாமல்....

தோழியே....
யன்னல் கம்பிகளும் பலருக்கு இப்போ
சிறைக்கம்பிகள் தான்....
அதில் நானும் ஒருவன் - சிநேகிதியே
அதற்காகய் நான் உனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்கவுமில்லை.
வெறுக்கவுமில்லை.

அன்றும் இன்னும் நான்
கூட்டத்துகிளியல்ல...
கூண்டுக் கிளியாய் வாழ்கிறேன் இறக்கை இன்றி
புரிந்து கொள்!

இறக்கையின்றிக் கழிந்து போனது
வாழ்வின் அரைப்பகுதி...
இறக்கைகள் முளைக்கா தென்று
கழிகிறது மிகுதி நாட்கள்...

அதற்காய் நான் சோர்ந்து போகவில்லை
தொடர்கிறது என் வாழ்க்கைப்பயணம்.....
சினேகிதியே!
உள்ளத்தில் உன் நட்பு உயிரோடு வாழ்கிறது
புரிந்து கொள் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுகள்

பிரிந்து போன நம் உறவு....
சிதைந்து போன உன் புகைப்படம்....
தொலைந்து போன உன் முகவரி....
கலைந்து போன என் கனவு....
இருளாகிப்போன என்வாழ்வு....
யாவும் உன்னால்....

06071

களவு போன என் கைபேசி....
ஏமாறிப்போன என் மனசு....
தவறிப்போன என் பேச்சு....
தறி கெட்டுப்போன என் வாழ்வு....
கெட்டுப்போன என் உடம்பு....
எல்லாம் என்னால்....

மத்திய நூலகம்
மத்திய சனசமூக நிலையம்
விசுவமடு.

குந்தி இருந்து குடித்துக் கும்மாளமிட்டு
குழி பறிக்கும் நண்பர் கூட்டம்....
உண்டு உறங்கி உறவாடி - காலை....
வாரிவிடும் பெண்கள் கூட்டம்....
யாவும் நம்மால்....

பெண்ணினம் விடுதலை பெற....
ஆணினம் அடக்கப்பட....
ஆங்காங்கே கள்ளுத் தவறணைகளில்
கையேந்துகிறது ஆண்கள் கூட்டம் - இது
யாரின் குற்றம் உறவுகளே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவின் வலி

விதியொன்று வந்து
பிரிவென்ற சொல்லோடு நடனமாட - நான்
இங்கு தவிக்கின்றேன் விடை அறியா வினாவாய்....
காற்றோடு வந்த கானம் ஒன்று
காதோடு கதை பேச....
கண்ணீரில் வாடுகின்றேன் நான்....

மொட்டொன்று பூவாகி காயாகி கனியாகு முன்பே
சருகாகிப்போனதேன்....?
புயல் வந்து மழையாகு முன்பே
மழை வந்து புயலாகிப் போனதேன்...?
உறவொன்று நிலையாகு முன்பே
பிரிவாகிப் போனதேன்....?

பெற்றவரும் வெறுக்க
வளர்த்தவரும் வெறுக்க
பாவியாய் நின்ற எனக்குப்
பாசத்தைக் காட்டிய - அந்த ஜீவனும்.....
பாசத்தைக் காட்ட மறுப்பதன்
காரணம் தான் என்ன?
நான் பாவி என்பதாலா?
பாவப்பட்டவள் என்பதாலா?

நீ....
மனிதத்தைத் தொலைத்து - வாழ்ந்த
காலங்களை நான் மறந்து
கடைசியாய் கேட்கிறேன்
என்னோடு வந்துவிடு....
இல்லை கொன்றுவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மையின் புன்னகை



சில்லென்று வீசிய குளிர்காற்று - என்
மேனி தழுவ - என்னவளின்
நினைவுகள் வந்து போயின...
கல்லூரித் தோழர்களாய் காகிதக்கப்பல் செய்து
கல் எறிந்து விளையாடிய நாட்களும்
வந்து போயின என் நினைவுகளில்....

கணினி வகுப்பறையில்....
உனக்காக நானும்
எனக்காக நீயும்
எழுதாமல் போன விடைகள் எத்தனை?

உன் மடிமீது தலைவைத்து சாய்ந்தபோது....
உன் அன்பில்...
மறந்துபோன என் தங்கையைக் கண்டேன்!
மடிந்து போன என் தாயைக் கண்டேன்!
மரணித்துப் போன என் தோழியைக் கண்டேன்!
மொத்தத்தில் உன்னில்
பெண்மையின் அன்பைக் கண்டேன்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவளே நீ
காமப் பொருளுமல்ல.....
காகிதக் கப்பலுமல்ல...
கண்டவரெல்லாம் கல் எறிந்து விளையாட
என்பதை உன்
காதலில் கண்டேன்.

கல்யாண மேடையிலே - என்
கைகோர்த்து நீ நடந்தபோது - உன்
உதட்டுப் புன்னகை கண்டு - நான்
தோற்றுப் போனேன் பெண்மையோடு....!
பெண்மையின் மென்மை கண்டு
ஆண்கள் எல்லாம் உண்மையாய்
வாழும் காலம் எப்போ வரும்?

மலர்ந்த மலர்கள் எல்லாம்
பூஜைக்குப் போவதில்லை
இது நிஜம் தான்.
பெண்மை எல்லாம் தோற்றுப் போவதில்லை.
இது உண்மைதானா?
பெண்கள் எல்லாம்
புன்னகையில் ஆண்களிடம்
தோற்றுப்போவதில்லை...
ஆண்கள் எல்லாம் பெண்களின் புன்னகையில்
தோற்றுப் போகின்றனர் என்பதனை
உன்னில் கண்டேன் நானடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே போகிறோம்... கலாசாரம்



20.04.2014 தமிழர்
முன்னேற்றக்கழக
சித்திரைத் தின விழா
சிறப்புக்கவியரங்கு
கிளிநொச்சி

நிர்வாண வாழ்வு.
தந்தை மகளென்றோ!
அண்ணன் தங்கையென்றோ!
வகைப்படுத்தா உறவுகள்....

ஐந்தறிவு ஜீவன் போல்
யார் யாருடனும்
உறவு கொண்ட காலம்
வேடுவர் காலம்....

காலத்தின் ஓட்டம்....
மூளை வளர்ச்சி....
மானம் காக்க வழியமைத்தான்
உறவுகளைப் பகுத்தான்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்கள் கடந்து போக
மனிதன் மனிதனானான்.
கால் முட்ட உடைபோட்டு
கற்பைப் பாதுகாத்தான்....

உறவுகளைப் பிரித்தான்.
சடங்குகள் சம்பிரதாயங்கள் என
கட்டுப்பாடுகளும் போட்டான்.
அன்று கற்பை காசாக்கவோ
காம வேட்டைக்கோ இடமில்லை...
மனிதன் மனிதனாய் வாழ்ந்தான்.

காலம் கண்மூடி கடந்து போக
கட்டுப்பாடில்லா பிள்ளைகளும்
கைபேசியின் வளர்ச்சியும்
துண்டுத் துணியோடு நடனமாடும்
சினிமாக்களின் சினேகிதிகளாலும்
கட்டுண்டு போன எம் தமிழ்
சோதரிகள் சோதரர்கள்....

பாட இடைவேளை தனில்
பள்ளிக் கணினி ஒன்றில்
ஆபாசப்படம் பார்த்த
பள்ளி மாணவனின் துணிச்சல்!!!

சட்டைக்குள் பக்குவமாய்
மறைத்து வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவேளைதனில்
மறைவாய் நின்று
காதல் மொழி பேசிய
பள்ளிச் சோதரியின் காதல் வேட்கை....

மாலை வகுப்பொன்றில்
மாணவிகள் கூட்டம்
ஆபாசப்படம் பார்த்த
துயரமான சம்பவம்....

கலாசாரம் மறந்து பிஞ்சு வயசில்
கற்பைப் பறிகொடுத்து
காம ரசிகர்களாய்
உலாவரும் பல முகங்கள்....
பாவனையற்ற வீடுகளிலும்
பாழடைந்த கிணறுகளிலும்
நிர்வாணமாய் கிடக்கும்
பெண்களின் உடல்கள்.....

கண்ணீர் விட்டால் வெட்கம்
கதறி அழுதால்
அதைவிட வெட்கம்....
பண்பாடு மறவா பண்பான பெண்கள்
நம் பெண்கள்
வெளிநாடுகளில் முரசு கொட்டும்
நம்மவர்....

சினிமா கலையரங்குகளில்
சித்திரமாய் காட்சியளிப்பவர் போல்
உள்ளாடை தெரிய உலாவரும்
நம்மவர் கூட்டம்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுதான் வேண்டுமென
மதில்களிலும் மதவுகளிலும்
காத்திருக்கும் ஆண்கள் கூட்டம்....

பண்பாடு பறந்து
பெண்ணியம் மறந்து
எங்கே போகின்றோம் நாமெல்லாம்....
தாயில்லா பிள்ளைகள் பல
தந்தை மாரால் கற்பவதியான
கொடூரம்....

சொந்த தங்கைமாரிடம் - தம்
காம பசிதீர்க்கும்
சில அண்ணன்மார்கள்...
வெளியே சொல்ல முடியாது
தவிக்கும் தங்கைமாரின் கண்ணீர்...

கட்டிய புருசன் மறந்து
கள்ளக் காதலனோடு அலையும்
சில அம்மாமார்....
அழகிய மனைவி வீட்டில் வாட
இன்னோர் தோழியிடம் இன்புறும்
ஆண்கள் கூட்டம்....

பள்ளி செல்லும் எண்ணிரண்டு வயசு...
தங்கைக்கு ரகசிய கருக்கலைப்பு....
செய்யும் சாத்தான்கள்...
நிம்மதி தேடி ஆலயம் செல்லும்
அபலைப் பெண்களிடம்
சுகம்காண நினைக்கும் சாமிமார்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே போகின்றோம் நாமெல்லாம்....
வேடுவர் காலம் நோக்கியா?
உறவின் பகுப்பை மறந்து
மானத்தை இழந்து
நிர்வாணமாய் வாழ வழி தேடுகிறோமா?

பிள்ளைக் கவி ஒன்று
வானொலி ஒன்றில் கவிபாட - அதை
கண்டித்த ஆசானின் கல்லான இதயம்...
கண்ணீர் பனிக்கிறது என் கண்களில்.
கள்ளமில்லா அப்பிஞ்சின்
கற்பனைக்கு
ஏனிந்த சோதனை....

கடைசியாய் வந்தாலும்
நீ தோற்கவில்லை
தட்டிக் கொடுத்திடும் பண்பாடு
நம் பண்பாடு - இதை
அறியவில்லை அவ் ஆசான்....

தட்டிக்கேட்க என்னிடம் தகுதி இல்லை...
கலங்கிய மனதோடு
விட்டுச் செல்கிறேன் உங்களிடம்
எங்கே போகின்றோம் - நாம்
என்பதையறியாமல்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைக்கால இராப்பொழுதிலே
நிலவு தெரிவது போல
வெளிச்சமிலா வேளையிலே
மின்மினிகளின் ஒளிர்வு போல
ஏதோவோர் தனித்துவமாய்
கரீஸ் தரும் கவிதைகள்

**யோ. புரட்சி**
செல்லமுத்து வெளியீட்டகம்,
வள்ளுவர்புரம்.

செல்லமுத்து வெளியீட்டகம்
Sellamuththu publication



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்...

தமிழ் FM முகுந்தன், அதிபர் நாகேந்திரராசா, புரட்சி, முல்லைத்தீபன், உதயன் News, அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்


06071

வடமாகாண சபை, கனேடிய தொலைக் காட்சி மின்னல் இயக்குநர் செல்வரூபன், கவிஞர்கள், ஆர்வலர்கள், செல்லமுத்து வெளியீட்டகம், நண்பர்கள்.

மத்திய நூலகம்
மத்திய சனசமூக நிலையம்
விசுவமடு.

எம்ரெக், மெகா கல்வி நிலையம், Study கல்வி நிலையம், வடமாகாண சபை குருகுலராஜா, விசுவமடு மகாவித்தியாலயம், ஒளிநிலா ஸ்ரூடியோ அன் பந்தல் சேவை, விசுவமடு வர்த்தக சங்கம், நாதன் திட்டம் மாதர் சங்கம், விசுவமடு பொதுநூலகம், விசுவாசகம் இதழ் குழு, அரவிந்தன், ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மைய இயக்குனர் தேவானந்த், சாயி பிறிண்டேர்ஸ்.

மத்திய நூலகம்
மத்திய சனசமூக நிலையம்
விசுவமடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய நூலகம்
மத்திய சனசமூக நிலையம்
விசுவமடு.

இப்புத்தகம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் திருப்பிக் கையழித்தல் வேண்டும். குறித்த தவணைக்குள் கையழிக்கப்படாத புத்தகங்கள் ஒவ்வொன்றுக்கும் வாரம் ஒன்றுக்கு குற்றப்பணமாக ரூபா 10/= அறவிடப்படும்.

| | | |
|---|---|---|
| 07 JUL 2015 89 | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

"அறிவைப் பெருக்க துணைபுரிவோம்"
நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தான் தோன்றியாக கவிதை புனையும் விசுவமடு கரீஸின் முதல் கவிதை நூலை பாராட்டாமல் இருக்க முடியாது. கவிதை கதை சொல்லும் வலுவான ஊடகம்.

சொற்களாலும் சொற்கோர்ப்புக்களாலும் சந்தங்களினாலும் படிமங்களினாலும் தான்பேசும் பொருளை வாசகர் அல்லது கேட்போர் மனங்களில் ஆழப்பதித்துவிடும் ஆற்றல் கொண்டது. கவிதை மொழியை நன்கு தேர்ந்து அதன் வழி பகிர்தலை மேற்கொண்ட பல மகான்களை இன்றும் உலகம் போற்றுகிறது. ஷேக்பியர் என்றமஹாகவிஞன் எமக்கு தந்த அற்புதப்படைப்புக்கள் காலம் கடந்தும் வாழ்கின்றன. ரவீந்திரநாத் தாகூர் எம் நினைவகலா கவிஞராக காலத்துள் வாழ்கிறார். எம் கவிஞர் சுப்ரமணிய பாரதியாரை நாம் கொண்டாடுகின்றோம்.

கவிதை மொழிதன் உள்ளடக்கமாக வலிகளைப் பேசியிருக்கிறது. 'பிறர் ஈன நிலை கண்டு துள்ளியிருக்கிறது. காலத்தின் கண்ணாடியாக துலங்கியிருக்கிறது. காலத்தைப் பதிவு செய்திருக்கிறது.

இங்கு, முகவரி அறியா முகவரி ஒன்றிற்காய் என்ற கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகள். காலத்தின் கண்ணாடியாக காலத்தைப் பதிவு செய்வதாக அமைந் திருப்பது இதன் சிறப்பு. குறிப்பாக பெண்களின் அவலங்களை பதிய முயற்சித்திருப்பது பாராட்டுதலுக் குரியது. க.அரிகரன் என்ற சொந்தப் பெயர் உடைய விசுவமடுகரீஸ் தன் காதல் கனவுகளோடு வாழ்வியல் அனுபவங்களை தன்கவிதையூடாக விபரிக்கின்றார். ஒவ்வொரு கவிதையிலும் அவர் எதிர்பார்க்கின்ற உலகு தொடர்பான ஏக்கம் துலங் குகிறது. அவர் கையாளும் மொழி மேலும் ஆழம் பெறுகின்ற போது கவிதைகள் மேலும் ஆழம் பெறும்.

படைப்பாளிகள் பலர் இன்று தறுக்கணித்துப் போனவர்களாக " நமக்கென்னையா நாம நம்மபாட்டில இருப்பம்" என்று இருப்பதான மலட்டுச் சூழலில் தான் சார்ந்த சூழலை ஒருவகையான விமர்சனப் பாங்கில் விசுவமடுகரீஸ் பிரசவிப்பது மகிழ்ச்சி தருகின்றது.





**தே.தேவானந்த்**
**இயக்குனர்**
**ஊடகவளங்கள் மற்றும் பயிற்சிமையம்**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்**

978-955-42308-0-2

சாயி பிறிண்டேர்ஸ் - 077 2209474.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org